**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 07.01.2025**

**O.S. 67/2017**

**வா.சா. 1 - வீரநாதன்**

**1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எனது வீட்டிற்கு அப்ரூவல் பிளான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எந்த பக்கம் பார்த்து வாசல் அமைத்துள்ளேன் என்றால் கிழக்கு பக்கம். எனது வீட்டை தொட்டு கிழக்கு பக்கம் கழிவு நீர் ஓடை உள்ளது என்றால் எனது வீட்டை தொட்டு கிழக்கு பக்கம் 12 அடி பாதை அதை தொட்டு கழிவு நீர் ஓடை செல்கிறது. பொது பாதையில் இருந்து தாவா பாதையில் மின் இணைப்பு செல்கிறது என்றால் சரிதான். எத்தனை வீட்டிற்கு மின் இணைப்பு செல்கிறது என்றால் நான்கு மின் கம்பங்கள் உள்ளது 22 வீடுகள் உள்ளது அவர்களுக்கு மின் இணைப்பு செல்கிறது. 22 வீடுகள் அப்ரூவல் பெற்றுள்ளார்களா என்றால் தெரியாது. அவகாச பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. கன்னியாகுமரி நாகர்கோவில் மெயின் ரோட்டில் இருந்து தான் எங்களுடைய தர்க்கப்பட்ட தனியார் பாதை இணைகிறது என்றால் சரிதான். தர்க்கப்பட்ட பாதையில் கேட் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். தெற்கிலிருந்து வரக்கூடிய தர்க்கப்பட்ட பாதையில் சேரக்கூடிய இடத்தை திறந்து காட்டியுள்ளேனா எப்படி காட்டியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. தெற்கிலிருந்து வரக்கூடிய தர்க்கப்பட்ட பாதையில் சேரக்கூடிய இடம் நான் விலை வாங்கியதிலிருந்து திறந்து தான் உள்ளது என்றால் சரிதான். நான் விலை வாங்குவதற்கு முன்பாக எவ்வாறு இருந்தது என்றால் தெரியாது. 1ம் பிரதி விலைக்கு கொடுத்த பாலன் என்பவர் தர்க்கப்பட்ட தெருவை பார்த்து வாசல் போட்டுள்ளார் வீடு கட்டி வாசலும் போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாலன் என்பவருக்கு எதிராக மேற்படி வாசலை அடைக்கும் படி உரிமையியல் வழக்கு தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கிற்கு பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தெற்கே இருந்து வடக்கே வரக்கூடிய பகுதியும் திறந்து தான் உள்ளது என்றால் சரிதான். எத்தனை வருடமாக திறந்து தான் உள்ளது என்றால் எப்போதும் திறந்து தான் உள்ளது. இதுவரை யாரும் அதில் கேட் போட்டதில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 2 உரிமை இல்லாத சொத்திற்காக பெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 பட்டாவிற்கும் தர்க்கப்பட்ட பாதைக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. எனக்கு தர்க்கப்பட்ட பாதையில் உரிமை இல்லாததால் தான் எனது முன் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் வா.சா.ஆ 2. 3 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 வரைபடம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 புகாரில் சொல்லப்பட்டது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை அதனால் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கட்டிட வரைபடத்தை தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே வா.சா.ஆ 2 ரசீதுகளை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 புகைப்படத்தில் வடக்கிருந்து தெற்காக மின் இணைப்புகள் செல்கிறது என்றால் அது எங்களுடைய தேவைக்காக செல்கிறது. வா.சா.ஆ 6 புகைப்படத்தில் கிழக்கு பக்கம் தர்க்கப்பட்ட பாதையை தொட்டு ஓடை செல்கிறது என்றால் சரிதான். மேற்படி ஓடையை யாரும் அடைக்க வில்லை என்றால் அது எங்களுடைய தேவைக்காக போடப்பட்ட ஓடை. மின் இணைப்பு எடுப்பதற்கு போடப்பட்ட வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அது மின்சார துறையில் தான் இருக்கும் எனக்கு அது பற்றி தெரியாது. வா.சா.ஆ 6 புகைப்படத்தில் தர்க்கப்பட்ட பாதையில் ஒருவர் சென்றுக்கொண்டிருக்கிறார் என்றால் அவர் வாடகைக்கு இருந்த நபர் தர்க்கப்பட்ட

பாதையில் பஞ்சாயத்தால் பேவர் பிளாக் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் நாங்கள் அதற்கு ஆட்சேபனை செய்தோம். தர்க்கப்பட்ட பாதையில் பஞ்சாயத்தால் பேவர் பிளாக் ரோடு போடப்பட்டதை நீக்க கோரி எந்த வழக்கும் இது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்ய எந்த உரிமையும் கிடையாது பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய பாதையை பன் படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**5 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தில் பாதை இருக்கிறதா என்றால் எங்களுக்காக நாங்கள் போட்ட பாதை உள்ளது. அந்த பாதையின் நீள, அகலம் என்ன என்றால் அகலம் 18 லிங்ஸ் நீளம் சரியாக நியாபகம் இல்லை. எங்களின் பட்டா பூமி எவ்வளவு என்றால் 4 சென்ட் பாதை உட்பட. நான் சொல்லக்கூடிய 18 லிங்ஸ் பாதை எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம். நான் சொல்லக்கூடிய 18 லிங்ஸ் பாதை கழித்து மீதி எவ்வளவு சொத்து என்னிடம் உண்டு என்றால் அதை நான் கணக்கு பார்க்கவில்லை. அந்த பாதையில் பேவர் பிளாக் கற்கள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாதையில் பேவர் பிளாக் கற்கள் எந்த ஆண்டு போடப்பட்டுள்ளது என்றால் 10, 12 வருடங்கள் இருக்கும் வருடம் சரியாக நியாபகம் இல்லை. கன்னியாகுமரி பஞ்சாயத்தால் அந்த பாதையில் பேவர் பிளாக் கற்கள் எந்த ஆண்டு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதற்கு நாங்கள் ஆட்சேபனை செய்தோம். பேவர் பிளாக் கற்கள் போடப்பட்ட பாதையை ஒட்டி கழிவுநீர் ஓடை உள்ளது என்றால் சரிதான். கழிவு நீர் ஓடையும் பஞ்சாயத்தால் தான் அமைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது நான் வாங்கும் போதே அந்த ஓடை உண்டு. இந்த வழக்கில் நான் தாசில் தாரை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். கழிவு நீர் ஓடை எந்த

திசையில் தொடங்கி எந்த திசைக்கு செல்கிறது என்றால் கடைசி வீட்டில் இருந்து சானலில் சென்று சேர்கிறது. காம்பவுண்டு சுவரை இடிக்கக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன் அந்த காம்பவுண்டு சுவர் எங்கு உள்ளது என்றால் ஓடைக்கு கிழக்கில் அந்த காம்பவுண்ட் சுவர் உள்ளது. எனது சொத்தின் சர்வே எண். என்ன என்றால் 537 /2G2. எனது வீட்டிற்கு முன்னால் உள்ள காம்பவுண்டு சுவர் இடிக்கப்பட்டுள்ளதாக ஆணையர் வரைபடத்தில் நி.ம.சா.ஆ 1ல் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் பின்னர் அந்த சுவரை மீண்டும் கட்டிவிட்டோம். இடிக்கப்பட்ட காம்பவுண்டு சுவர் எப்போது கட்டப்பட்டது என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது கட்டிவிட்டோம். தாவா பாதையானது எங்கள் வீட்டிற்கு வடக்கு பக்கமும் தெற்கு பக்கமும் உள்ள தெருக்களில் வந்து சேருகிறது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு வடக்கு பக்கமும் தெற்கு பக்கமும் உள்ள தெருக்கள் மெயின் ரோட்டில் சேருகிறது என்றால் தெற்கு பக்கமும் உள்ள தெருக்கள் மெயின் ரோட்டில் சேருகிறது. தாவா பாதையில் வாகனம் போக்குவரத்து உண்டு என்றால் வாடகைக்கு குடியிருக்கும் 22 வீடுகளில் உள்ள நபர்களின் வாகனம் மட்டும் செல்லும். தாவா பாதையில் இரண்டு பக்கமும் பாரிகார்ட் கேட்டு போடப்படவில்லை என்றால் சரிதான். தாவா பாதையில் பொதுமக்கள் நடக்கக்கூடாது என எந்த தடை உத்தரவும் கிடையாது என்றால் உத்தரவு எதுவும் கிடையாது. தாவா பாதை பஞ்சாயத்தால் அமைக்கப்பட்ட பாதை 50 ஆண்டுகாலமாக பொதுமக்களால் பயன்படுத்தக்கூடிய பொதுப்பாதை என்றால் சரியல்ல. 22 வீடுகளை சேர்ந்தவர்கள் இந்த வழக்கில் வாதி கிடையாது என்றால் சரிதான். நான் சொல்லக்கூடிய 22 பேரில் 2 நபர் மட்டும் தான் இந்த வழக்கில் கட்சி என்றால் சரிதான். அ-பரிகாரத்தில் இதர குடியிருப்பு தாரர்கள் என்பது யார் என்றால் நான் சொல்லக்கூடிய 22 வீடுகளை சார்ந்தவர்கள். இந்த வழக்கை நான் தனிப்பட்ட முறையில் தாக்கல்

செய்துள்ளளேன் என்றால் சரிதான். 22 வீடுகளை சார்ந்தவர்களுக்காக வழக்கு தாக்கல் செய்ய நீதிமன்ற அனுமதியை பெறவில்லை என்றால் அனுமதி வாங்க வில்லை. நான் சொல்லக்கூடிய 22 வீடுகளை சார்ந்தவர்கள்இந்த வழக்கில் கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா பாதை பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் 5 ம் பிரதிவாதியால் ரோடு மற்றும் ஓடை அமைத்து பராமரித்து வரும் நிலையில் எனக்கோ, என்னை சார்ந்த மற்ற நபர்களுக்கோ பாதையில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை பாதையில் ஒரு பகுதியை ஆக்கிரமித்து வைத்துள்ளேன் அந்த ஆக்கிரமிப்பை தட்டிக் கழிக்க வேண்டி தேவையில்லாமல் 5 ம் பிரதிவாதியை கட்சி சேர்த்து கஷ்டப்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா பாதை பொது மக்கள் பயன்படுத்தும் பாதை என்றால் சரியல்ல. பொது மக்கள் தாவா பாதையில் செல்வதை நான் தடுத்துள்ளேனா என்றால் நான் இதுவரை தடுத்ததில்லை பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையல்ல என போர்டு உள்ளது. நான் பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையல்ல என போர்டு வைப்பது சட்டத்திற்கு விரோதமானது என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பாளர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்ய தகுதியில்லை என்றால் சரியல்ல. தேவையில்லாமல் 5 ம் பிரதிவாதியை கட்சி சேர்த்து கஷ்டப்படுத்தி வருவதால் செலவு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**<u>5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**